# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 03 திங்கட்கிழமை 18.11.2024 கதிர் 421




# அடுத்த ஐந்து வருடங்களில் என்னைப் பற்றித் தெரியும்!

## - தமிழ் அரசின் தேசியப்பட்டியல் எம்.பி சத்தியலிங்கம் -



அடுத்து வரும் ஐந்து வருடங்களில் நான் யார் என்பதும், எவ்வாறு செயற்படுகிறேன் என்பதையும் அனைவரும் அறிந்துகொள்ள முடியும்" என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளவரும், அந்தக் கட்சியின் பதில் செயலாளருமான வைத்தியர் பி. சத்தியலிங்ம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "பாரிய பொறுப்பு என்மீது சுமத்தப்பட்டுள்ளது. மாகாணசபை உறுப்பினராக இருந்த போது பல அபிவிருத்தி திட்டங்களச் செய்திருந்தேன். இருந்த போதும் ஏதோ ஒரு காரணத்திற்காக மக்கள் என்னை நிராகரித்தனர். அதற்கு பல காரணங்கள் உள்ளன.

எனக்கு எதிரான போலிப் பிரச்சாரங்களை எதிர்க்கட்சிகளும், போட்டியாளர்களும் முன்வைத்திருந்தனர். அது எனது தோல்விக்கு ஒரு காரணமாக இருந்தது.

எனது தொழில் அரசியல் அல்ல. நான் ஒரு வைத்தியர். கட்சி இந்த 2➤

## புலமைப்பரிசில் முடிவுகளை வெளியிட உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை!

கொழும்பு, நவ. 18

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாக்கள் கசிந்தமை தொடர்பில் பரீட்சைக்குத் தோற்றிய பிள்ளைகளின் பெற்றோர்கள் சிலரும், பிள்ளைகள் சிலரும் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணையின் போதே உச்ச நீதிமன்றம் இன்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் பகுதி ஒன்று வினாத்தாளில் காணப்பட்ட சில வினாக்கள் பரீட்சைக்கு முன்னரே தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் ஒருவரால் வெளியிடப்பட்டிருந்தமை குறித்து சர்ச்சை நிலவியது. 2➤



*ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் இன்று காலை பதவியேற்றுள்ள அமைச்சர்கள் 22 பேரையும் படத்தில் காணலாம் (ஐ-05)*

## வலி. வடக்கில் காணிகளை விடுவிக்க ஆளுநர் மட்டத்தில் நடவடிக்கை ஆரம்பம்!

யாழ்ப்பாணம், நவ. 18

கடந்த 34 வருடங்களுக்கு மேலாகப் படையினரால் வலிந்து கையகப்படுத்தப்பட்டிருக்கும் பொதுமக்களின் காணிகளைப் படிப்படியாக விடுவிப்பதற்குத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

முதற்கட்டமாக, யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் வடக்கு பகுதியில் படையினரால் அமைக்கப்பட்டுள்ள உயர் பாதுகாப்பு வலயப் பகுதியினுள் அடங்கும் காணிகளை 2➤

## அநுர தலைமையில் புதிதாகப் 22 அமைச்சர்கள் பதவி ஏற்பு!



கொழும்பு, நவ. 18

இலங்கையின் புதிய அமைச்சரவை அமைச்சர்கள் இன்று காலை பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான புதிய அமைச்சரவை 22 அமைச்சர்களைக் கொண்டமைகிறது. நிதி, பாதுகாப்பு மற்றும் டிஜிற்றல் தொழில்நுட்பம் ஆகிய அமைச்சுகள் ஜனாதிபதியின் வசமுள்ளதுடன், பிரதம மந்திரியாகக் கலாநிதி ஹரிணி அமரசூரியவும் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில், ஜனாதிபதி செயலகத்தில் இன்று காவை 10:00 மணியளவில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ஐ - 05)

## தேசியப் பட்டியலில் எம்.பி. ஆகிறார் ரவி



கொழும்பு, நவ. 18

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் எம்.பியாக முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க பதவியேற்கவுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணிக்கு இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்கள் கிடைத்திருந்தன. அவற்றில் ஒன்றுக்கு முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், மற்றைய பெயர் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ)

## அமைச்சர்களும், அமைச்சுகளும்

கொழும்பு, நவ 18

இன்று அமைச்சர்களாகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட 21 அமைச்சர்களின் விவரம் வருமாறு:

1. கலாநிதி ஹரிணி அமரசூரிய - கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்.
2. விஜித்த ஹேரத் - வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர்.
3. ஹர்ஷன நாணயக்கார - நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்.
4. சந்தன அபேரத்ன - உள்நாட்டு அலுவல்கள், உள்ளூராட்சி சபைகள், மாகாண சபைகள் அமைச்சர்
5. சரோஜா சாவித்திரி போல்ராஜ் - மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர்
6. கே.டி. லால்காந்த - விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்பாசன அமைச்சர்.
7. அநுர கருணாதிலக - நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர். 2➤

## சமூக ஊடகச் செயற்பாட்டாளர்களுக்கு ஜனாதிபதி அநுர குமார நன்றி தெரிவிப்பு!

கொழும்பு, நவ. 18

இலங்கையில் புதியதொரு அரசியல் மாற்றத்தை நிகழ்த்துவதற்குச் சிறப்புப் பங்காற்றிய புலம்பெயர்ந்த இலங்கையர்கள் மற்றும் சமூக ஊடகச் செயற்பாட்டாளர்களுக்கு ஜனாதிபதி தனது நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையிலான புதிய அமைச்சரவையின் பதவிப் பிரமாண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இனங்களுக்கிடையில் பிளவில்லாத ஒரு அரசாங்கத்தை அமைப்பதற்கு புலம்பெயர்ந்த இலங்கையர்கள் மற்றும் சமூக ஊடகச் செயற்பாட்டாளர்களின் பங்கு பற்றிக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில், “இனங்களைப் பிளவுபடுத்தும் அரசியல் கலாசாரம் முடிவுக்கு வந்துள்ளது. வடக்கையும், தெற்கையும் பிரித்தாளும் அரசியல் கலாசாரமே இதுவரை காலமும் இலங்கையில் இருந்தது. நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் இந்தக் கலாசாரத்தை முடிவுறுத்தியுள்ளது. அனைத்து மக்களின் அபிலாஷைகளையும் வெற்றிகரமாக ஒரு புள்ளியில் கொண்டு வந்துள்ளது” என்று குறிப்பிட்டார்.

மேலும், புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு வாக்களித்த அனைத்து ஆதரவாளர்களுக்கும் நன்றி தெரிவித்ததுடன், இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தோர் மற்றும் இளம் சமூக ஊடக ஆர்வலர்கள் தேர்தலின் போது ஆற்றிய பங்களிப்புகள் மற்றும் ஆதரவைச் சிறப்புக் குறிப்புடன் நினைவு கூர்ந்தார்.

## அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பதவியை தராவிட்டால் மீண்டும் ஒரு அரச உத்தியோகத்தராகச் செயற்படும் எண்ணத்தில் இருந்தேன். வன்னி மாவட்டமானது திட்டமிட்ட இன அழிப்பு இடம்பெறுகின்ற ஒரு பிரதேசம். எனவே அதை உணர்ந்து செயற்படக் கூடிய ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் தேவையை அறிந்து கட்சி இந்த ஆசனத்தை எனக்கு வழங்கியுள்ளது.


என்மீது கட்சி வைத்த நம்பிக்கையை ஏற்று இந்தப் பகுதி மக்களுக்கு முழுமையான எனது சேவையை அர்ப்பணிப்போடு செய்வேன். அந்த வகையில் வாக்களித்த மற்றும் வாக்களிக்காத மக்களுக்கும் நன்றிகள் - கட்சிக்கும் நன்றிகள்.

இனிவரும் ஐந்து வருடங்களில் சத்தியலிங்கம் எப்படி செயற்படுவார் என்பதை அனைவரும் நிச்சயமாக பார்ப்பீர்கள். கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலும் தொடருவேன். அது பொதுச் சபையில் தீர்மானிக்கப்படக்கூடிய ஒரு விடயம். அதனை விடுவதற்கான சந்தர்ப்பம் இன்னும் ஏற்படவில்லை” என்றார். (ஐ - 05)











கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் 75 ஆவது ஆண்டு நிறைவு பவள விழா சிறப்பு நிகழ்வுகள் இன்று காலை பாடசாலை அதிபர் எம்.ஐ.ஜாபிர் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மாணவரும் முன்னாள் அதிபருமான சட்டத்தரணி எம்.சி.ஆதம்பாவா பிரதம அதிதியாக கலந்து கொண்டதோடு, கல்லூரியின் முன்னாள் அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரிய ஆசிரியைகள் மற்றும் மாணவர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (படங்கள் : எம்.எஸ்.எம்.ஸாகிர்)

## புலமைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் பரீட்சைத் திணைக்களமும், குற்றப் புலனாய்வுத் திணைக்களமும் தனித்தனியாக விசாரணைகளை முன்னெடுத்திருந்தன. விசாரணைகளின் அடிப்படையில் அலவ்வ பிரதேசத்தைச் சேர்ந்த தனியார் கல்வி நிலைய ஆசிரியர் ஒருவர் உட்பட இரண்டு பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தனர். வெளியில் கசிந்த வினாக்களுக்கு அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் புள்ளிகள் வழங்கப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியிருந்த போதிலும், மீள் பரீட்சை நடாத்தப்பட மாட்டாது என பரீட்சைகள் திணைக்களம் தெரிலித்திருந்தது.

இந்நிலையில், தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதை இடைநிறுத்தி இலங்கை உச்ச நீதிமன்றம் இன்று இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது. (இ-05)

## அமைச்சர்களும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

8. சுனில் குமார கமகே - இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுதுறை அமைச்சர்
9. இராமலிங்கம் சந்திரசேகர் - கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்.
10. உபாலி பன்னிலகே - கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்.
11. சுனில் ஹந்துன்னெத்தி - கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்.
12. ஆனந்த விஜேபால - பொதுமக்கள் பாதுகாப்பு, நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர்.
13. பிமல்ரத்நாயக்க - போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுக மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்.
14. கலாநிதி நலிந்த ஜயதிஸ்ஸ - சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர்.
15 பேராசிரியர் ஹினிதும சுனில் செனாவி - புத்தசாசன, சமயவிவகாரங்கள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்.
16. சமந்த வித்யாரத்ன - பெருந்தோட்ட, சமூக உட்கட்டமைப்பு அமைச்சர்.
17. வசந்த சமரசிங்க - வர்த்தக, உணவு பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்.
18. பேராசிரியர் கிரிஷாந்த சில்வா - விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பவியல் அமைச்சர்.
19. குமார ஜயகொடி - சக்தி வலு அமைச்சர்.
20. கலாநிதி தம்மிக பட்டபதி - சுற்றாடல் அமைச்சர்.
21. அனில் ஜயந்த பெர்ணாண்டோ - தொழில் அமைச்சர். (ஐ - 05)

## வலி.வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இனங்கண்டு, அவற்றின் உரிமையாளர்களை அடையாளப்படுத்தி காணி உரிமைப் பத்திரங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்த நடவடிக்கைகளுக்காக புதிதாக அமைக்கப்படவுள்ள அமைச்சரவையைச் சேர்ந்த அமைச்சர் ஒருவரையும், வடமாகாண ஆளுநர், நிர்வாக உத்தியோகத்தர்கள், படை உயரதிகாரிகள் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றை அமைப்பதற்கும், அதற்கான முன்மொழிவுகள் அடங்கிய வர்த்தமாணி அறிவித்தல் ஒன்றை வெளியிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 21 ஆம் திகதி புதிய நாடாளுமன்றம் அமைக்கப்பட்டதும், வரும் வாரமளவில் காணி விடுவிப்புக்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (ஐ - 05)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# இலங்கையில் மூன்று தமிழர்கள் விமானப் படையின் பயிற்றுனர்களாக நியமனம்

கொழும்பு, நவ. 18

அம்பாறை அக்கரைப்பற்று அலிக்கம்பை தேவகிராமத்திலிருந்து இலங்கை விமானப் படையின் பயிற்றுனர்களாக நியமனம் பெற்றுள்ளதாக சமூக வலைத்தள பதிவில் குறிப்பிட்டுள்ளது.

சுலக்ஸன், கலிஸ்ரா, வாணி ஆகியோர்களை உடற்பயிற்சி விமானப் படையின் பயிற்றுனர்களாக நியமனம் பெற்றுள்ளமைக்கு வாழ்த்துக்கள் தெரிவித்து இப்பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)



# அநுர அரசில் சம்பளமின்றி பணியாற்றவுள்ள அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள்




கொழும்பு, நவ. 18

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சம்பளம் கிடையாது என தெரிவிக்கப்படுகிறது.

அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் சம்பளம் பெற்றுக் கொள்ளாது தமது கடமைகளை முன்னெடுக்க ஆயத்தமாக உள்ளனர் என கட்சியின் அனுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுசந்த குமார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலான ஆரம்ப இனக்கப்பாடு ஏட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஊடக சந்திப்பு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

கடந்த 76 வருடங்களாக மகிழ்ச்சியாக வாழ்வது என்பது மக்களுக்கு வெறும் கனவாக காணப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் கூறுவது போன்று தற்போதைய அரசாங்கம் குறுகிய காலத்தில் விழுந்து விடாது என சுசந்த குமார மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ)




# பரீட்சை அதிகாரிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை

கொழும்பு, நவ. 18

கல்வி பொது தராதர உயர்தர பரீட்சை மேற்பார்வை பணிகளில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் உள்ளிட்ட மேற்பார்வை அதிகாரிகளுக்கு அலைபேசி எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பரீட்சைகள் திணைக்களம் இந்த தடையை விதித்துள்ளது.

இதன்படி பரீட்சை மேற்பார்வை கடமையில் ஈடுபட்டுள்ள பரீட்சை நிலைய பொறுப்பதிகாரி தவிர்ந்த ஆசிரியர்கள் உள்ளிட்ட ஏனைய அதிகாரிகள் பரீட்சை நிலையத்திற்குள் அலைபேசிகளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

பரீட்சை நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பரீட்சை நிலைய மேலதிக பொறுப்பதிகாரி ஆகியவர்களுக்கு மட்டுமே அலைபேசி எடுத்துச்செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பரீட்சை நடைபெறும் காலத்தில் மேற்பார்வை நடவடிக்கைகளை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி பரீட்சை மேற்பார்வை பணிகளுக்கு பரீட்சை திணைக்கள அதிகாரிகளுக்கு மேலதிகமாக மாகாண மற்றும் வலயக் கல்விப் பணிமனைகளின் அதிகாரிகளும் இணைத்துக்கொள்ளப்பட உள்ளனர்.

ஓர் மேற்பார்வை அதிகாரி 15 நாட்களில் 20 பரீட்சை நிலையங்களை மேற்பார்வை செய்ய வேண்டும் என பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

(ஐ)

# இயற்கையும் மனிதனும்

"உற்ற நண்பர்கள், உள்ளுக்குள் எதிரிகள்" இந்த வார்த்தை யாருக்கு பொருந்துகிறது என்றால் "மனிதர்களுக்கும் இயற்கைக்கும்" மட்டுமே பொருநதுகிறது.

இயற்கையோடு இணைந்து வாழ்வோம் என்று பல்லாயிரம் முறை சொல்லுவார்கள் மனிதர்கள், ஆனால் உண்மையில் இயற்கையின் ஒவ்வொரு வளங்களையும் தங்களுடைய சொந்த லாபத்துக்காக சுரண்டிக்கொண்டே தான் வாழ்வார்கள்.

இயற்கை இன்னும் மனிதர்களை நம்பி கொண்டுதான் இருக்கிறது. அதுவும் "நட்புக்கு இலக்கணமாக" ஒவ்வொரு மனிதர்கள் வாழ்வதற்கு தேவையான நீர், காற்று, உணவு, இவைகளை அளித்து கொண்டுதான் இருக்கிறது. மனிதர்கள் தங்களது உயிர் வாழ்தலுக்கு தேவை எவ்வளவோ அதற்கு மேல் அதனிடமிருந்து கறக்கவே முயற்சி செய்கிறார்கள்.



இயற்கையை பொருத்தவரை அதில் வாழும் அனைத்து உயிர்களையும் பாதுகாக்கும் பெரும் பொறுப்பில் இருக்கிறது. உயிரியியல் ரீதியாக படைக்கப்படும் அனைத்து உயிரினங்களும் இந்த பூமியில்தான் வாழ்ந்தாக வேண்டும். அது தன்னை உயிர்ப்பித்து வாழ்வதற்கு அதற்கு தகுந்தாற்போல இருப்பிடங்களை இயற்கை அமைத்து கொடுத்திருககிறது.

உதாரணமாக சொல்வதென்னாறால் நுண்ணியிரி போன்ற "அமீபா" பாக்டீரியா கூட எப்படி ஒரு உயிரின் உடலில் ஒட்டி வாழ வகை செய்து கொடுத்திருக்கிறது இயற்கை. அதே போல் அது எதை கொண்டு உயிர் வாழ முடியும் என்பதையும் நிர்ணயித்து ஒட்டுண்ணி வாழ்க்கையை நிர்மானித்து கொடுக்கிறது.

இப்படித்தான் அனைத்து உயிரினங்களும் இந்த பூமியில் வாழ்ந்து மறைந்தும் சென்று கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் உணவு சுழற்சியையும் அழகாக ஏற்படுத்தி உணவுக்காக ஒன்றை ஒன்று சார்ந்து வாழ வேண்டிய கட்டாயத்தில் வைத்திருக்கிறது இயற்கை.

அப்படித்தான் மனிதனையும் இயற்கை ஒரு உயிராக படைத்து இயற்கையோடு வாழ்வதற்கு ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தது. மனிதனுக்கு ஒரு அறிவை அதிகமாக படைத்ததன் நோக்கமே அந்த அறிவை கொண்டு மற்ற உயிரினங்களிட மிருந்து வித்தியாசப்படவேண்டும் என்றே படைத்தது.

மனிதனுக்கு கொடுக்கப்பட்ட இந்த அறிவே



இயற்கையின் அழிவுக்கும் காரணமாகி விட்டது என்று சொல்லலாம். உதாரணமாக பறவைகளைப் போல தனது இருப்பிடத்தை தானே உருவாக்கி கொள்ள அவனுடைய அறிவு வேலை செய்கிறது என்று வைத்து கொள்வோம். அதுவரை மனிதன் இயற்கையாய் அமைந்த காடுகளில் இருந்து மரங்களை எடுத்து இருப்பிடத்தை உருவாக்கி கொண்டிருந்தான். அல்லது குகைகளிலும் வசித்து வந்து கொண்டிருந்தான்.

அதற்கு மேல் அவனது 'அதிகபட்ச அறிவு வேலை செய்து' கிடைக்கும் உணவை சேமித்து வைப்பதற்கு யோசிக்க ஆரம்பித்தது. அப்படி கிடைக்கும் சேமிப்பான உணவுகளை பாதுகாக்க கிடங்குகளை ஏற்படுத்த கூடிய சூழ்நிலையும் வந்தது.

இப்படி கொஞ்சம் கொஞ்சமாக மனிதர்கள் 'சுயஷரூபத்தை' காட்ட தொடங்கினார்கள். ஓடி வரும் நதி செல்லுமிடங்களெல்லாம் தண்ணீர் தேவையை ஏற்படுத்தி தருகிறது, ஆனால் ஏதோ ஒரு இடத்தில் வாழும் மனித இடம் அந்த தண்ணீரை சேமிக்க நினைக்கிறது. அதற்கான ஏற்பாடுகளை செய்ய ஆரம்பிக்கிறான்.

இதிலேயே இயற்கையின் வழி ஓட்ட முறையில் மாற்றம் ஏற்பட தொடங்குகிறது. இயற்கையாய் ஓடும் நதி, தடுக்கப்பட்டு அணையாக உருவாகிறது. இதனால் கடைசி இடம் வரை ஓடி கொண்டிருந்த நதி தடைபட்டு, ஓர் இடத்தில் அடைக்கப்பட்டு மனிதன் நினைத்தால தான் அடுத்த பகுதிக்கு தண்ணீரை திறந்து விடும் வல்லமை பெற்று விடுகிறான்.

அப்படி விடும் தண்ணீரை சும்மா எப்படி விடுவது? என்று சிந்திக்கிறான். அதிலிருந்து மின்சாரம் உற்பத்தியை தொடங்கி விடுகிறான். இப்பொழுது யோசித்து பார்த்தால் கடைசி வரை ஓடி செல்லும் நதியில் எல்லா வகை உயிரினங்களும் வாழ்ந்து கொண்டிருக்கிறது, அவைகள் கடைசிவரை சென்று அந்தந்த இடங்களில் இருக்கும் உயிரினங்களுக்கு தான் உணவாகவோ அல்லது இவைகளுக்கு அந்த இடத்தில் கிடைப்பவைகள் உணவாகவோ கிடைத்து கொண்டிருந்தது.

தண்ணீர் தடைபட்ட பின்னால் என்னவாகும்? அணை வரை இருக்கும் உயிரினங்கள், எப்படியோ தட்டு தடுமாறி தேங்கிய தண்ணீருக்குள் வாழ்ந்து கொள்ளும், அதற்கு அடுத்து வாழ்ந்து கொண்டிருந்த உயிரினங்களின் எல்லைகள் தடுக்கப்பட்டு அவைகள் உயிர் பிழைக்க எங்கோ செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. நாள் செல்ல செல்ல, அவைகள் அங்கேயே மடிந்தும் போய்விடும் வாய்ப்பு உண்டு.

இவை உதாரணமாக சொல்லப்பட்ட நிகழ்வு என்றாலும் இப்படித்தான், மனிதன் இயற்கையோடு முதலில் தோழமை கொள்வது போல ஆரம்பிக்கிறான்.. ஒரு சிறிய இடத்தை ஏற்படுத்தி அதில் தன்னை நிலை நிறுத்தி, கொஞ்சம் கொஞ்சமாக சுற்றி வர, இயற்கை ஏற்படுத்தி இருக்கும் அனைத்தும் தன்னை சார்ந்தே இருக்கவேண்டும் என்னும் மன நிலைக்கு சென்று விடுகிறான்.

இப்பொழுது தனிமனித சுரண்டல்கள் அவர்களின் வசதிக்காக அமைப்பாக்கப்பட்டு அவைகள் "அரசுகளாக" அல்லது அரசாங்கம் என்று ஆக்கப்படுகின்றன். இந்த அரசாங்கங்களை மனிதர்கள் நிர்மாணித்து அதை நிர்வாக அமைப்பாக மாற்றி 'இயற்கை மேல் சுரண்டல்கள் செய்யப்படுவதை' சட்டபூர்வமாக்க ஏற்பாடு செய்து கொள்கிறார்கள்.

இந்த பூமியில் வாழும் மற்ற உயிரினங்கள் திகைத்து போய் இவர்களை எதிர்க்க முடியாமல் மனித கூட்டங்களுக்கு அடிமைகளாகவோ அல்லது அவனை விட்டு குறைந்த அளவில் இருக்கும் காட்டு புறங்களுக்கு ஓடி விடுகின்றன. அங்கும் அவைகளை வாழ விடாமல் "இன்னும் இன்னும்" என்னும் எண்ணத்தில் காடுகளை அழித்து தனக்குள் கொண்டு வந்து கொண்டுதான் இருக்கிறான் மனிதன்.

ஓரவுக்கு மனிதர்கள் இந்த பூமியில் வாழ வழி செய்து கொண்டார்கள். தங்களுக்குள் ஒரு அமைப்பையும் ஏற்படுத்தி அதை அரசாங்கம் என்றும் பெயரிட்டு கொண்டார்கள். எல்லாம் முடிந்த பின் அடுத்து சிந்திக்க ஆரம்பிக்கிறான், அவனது தேவைகளை பட்டியலிடுகிறான். 1. வாழ நல்ல வசதி அதற்காக பிரமாண்ட இருப்பிடங்கள், அந்த இருப்பிடங்களுக்குள் மனிதனுக்கு தேவையான தண்ணீர், மின்சாரம், மற்றும் சொகுசு பொருட்கள் இவைகள் தேவை. 2. இதற்கு தேவையான பொருட்கள் எங்கிருந்து பெறுவது? 3. அடுத்து அவனது நகர்வுகள், இதற்கு என்ன தேவை? வாகனங்கள், ஊர்திகள். 4. மனித தொடர்புகள் இதற்காக என்ன செய்வது? வானத்தை அண்ணாந்து பார்க்கிறான், ஓ..வானம் கூட மனிதனுக்கு சொந்தம்தானே..! அதனால் அதனையும் தகவல் தொடர்புகளுக்காக வளைத்து போடுகிறான்.

இப்படி ஒவ்வொன்றுக்கும் தேவைப்படுபவைகளை எப்படி பெறுவது? பூமியின் வயிற்றை பிளக்கிறான். கிடைக்கும் அத்தனையும் அள்ளி எடுக்கிறான், இன்னும் எடுத்து கொண்டே இருக்கிறான். என்றாவது ஒரு நாள்.. எல்லாமே தீர்ந்து விடும் என்னும் எண்ணமின்றி.. எடுக்கிறான்.

இயற்கை திடுக்கிட்டு பார்க்கிறது, பார்த்து என்ன செய்ய முடியும்? அதற்குள் கிட்டத்தட்ட அதன் பலத்தில் பாதியை மனிதன் பெற்று விட்டானே..!

மனிதன் இன்னும் பயத்தோடு இருப்பதற்கு காரணமே இயற்கையின் வலிமையை கண்டு மட்டுமே. அதற்காக தன்னை ஓரளவு பாதுகாத்து கொள்ள முயற்சிகள் செய்து கொண்டாலும் அதனுடைய வலிமை இவனைப்போல ஓராயிரம் உருப்படிகள் வந்தாலும் உருத்தெரியாமல் செய்து விடும் நீர், நெருப்பு, காற்று, மண் பிளவு, அல்லது சரிவு இவைகளை கண்டே பயப்படுகிறான்.

அதனால்தான் இயற்கையோடு உற்ற நண்பனாய் இருப்பது போல் காட்டியபடியே அதனை அனுபவிக்கும் சிந்தனையோடுதான் எப்பொழுதும் இருக்கிறான். வெளிச்சத்தில் அதன் மீது கை போட்டு காட்டியபடி இருந்தாலும் இயற்கை இன்றும் அவனிடமிருந்து தள்ளித்தான் நிற்க வேண்டும்.

இவைகள் மனிதனுக்கும் இயற்கைக்கும் இருக்கும் முரணான நட்புக்களே தவிர மனிதனுக்கும் மனிதனுக்கு ஏற்படும் மோதல்கள் அதனால் இயற்கையை அதிகமாக சுரண்டப்போவது நீயா நானா? இப்படிப்பட்ட போராட்டங்கள் அடுத்தடுத்து இந்த உலகத்தில் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும்



# தோல்விக்கான காரணங்களை வெளியிட முடியாது சஜித் தரப்பு உறுதி

கொழும்பு, நவ. 18

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் தோல்விக்கான சில காரணங்களை வெளியிட முடியாது என அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

எங்கள் தோல்விக்கான சில காரணங்களை மூடிய கதவுகளுக்குப் பின்னால் கட்சியின் மற்ற உறுப்பினர்களுடன் மட்டுமே விவாதிப்போம் என்று மரிக்கார் இன்று ஊடகங்களுக்கு குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஏன் பொதுமக்களிடம் இருந்து விலகி நிற்கிறார் என்று கேட்டதற்கு, சரியான நேரத்தில் சஜித் பிரேமதாச பொது வெளியில் வருவார் என்றும் மரிக்கார் கூறியுள்ளார். (ஐ)

# இலங்கை நாடாளுமன்றில் விழிப்புலனற்றவர் எம்பியாக தெரிவு!

கொழும்பு, நவ. 18

இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் முதல் தடவையாக விழிப்புலனற்றவர் என்ற வகையில் இலங்கை பார்வையற்ற பட்டதாரி சபையின் தலைவர் சுகத் வசந்த டி சில்வா நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு தகுதி பெற்றுள்ளார். இவ்வருட நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியிலிருந்து தேசியப்பட்டியல் உறுப்பினராக பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளார்.

பலப்பிட்டிய, கொடகெதர பிரதேசத்தில் 1967 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26 ஆம் திகதி பிறந்த இவருக்கு தற்போது 57 வயதாகும். ஐந்தாம் வகுப்பில் கிரிக்கெட் விளையாடச் சென்ற அவர் கண்ணில் பந்து பட்டதால் பார்வைக் குறைபாடு ஏற்பட்டது.

அந்த விபத்தின் பின்னர் சுகத் முற்றிலும் பார்வையற்றவராகி, அதன் பின்னர் மேலதிக கல்விக்காக இரத்மலானை பார்வையற்றோர் கல்லூரியில் அனுமதிக்கப்பட்டார்.

அதன் பின்னர், பல்கலைக்கழகத்தில் முதல் வகுப்பில் சித்தியடைந்த சுகத் வசந்த டி சில்வா, கொழும்பு பல்கலைக்கழகத்தின் மாணவர் வழிகாட்டி அலுவலகத்தில் சிறிது காலம் பணியாற்றினார்.

பின்னர், சமூக சேவைகள் அமைச்சின் அதிகாரியாக 25 வருடங்கள் நீண்ட சேவையாற்றிய சுகத் வசந்த டி சில்வா பாராளுமன்ற தேர்தலை எதிர்கொள்ளும் நோக்கில் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

உயர்தர கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போதே மக்கள் விடுதலை முன்னணியில் தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்த சுகத் வசந்த, தனது அரசியல் வாழ்க்கையில் தற்போது 40 வருடங்களை நிறைவு செய்துள்ளார். (ஐ)

# அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவில் மாற்றம்

கொழும்பு, நவ. 18

வர்த்தக வங்கிகளில் இன்று அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி நிலையாக உள்ளது.

அதன்படி, செலான் வங்கியில், அமெரிக்க டொலரின் கொள்முதல் பெறுமதி 287. 85 முதல் ரூ. 287.50 ரூபாவாகவும், விற்பனை பெறுமதி 295.35 முதல் ரூ. 295 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

வங்கியின் கூற்றுப்படி, அமெரிக்க டொலரின் கொள்முதல் பெறுமதி 288.25 முதல் 287.85 ரூபாவாகவும், விற்பனை பெறுமதி 298.25 முதல் 297.85 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

கொமர்ஷல் வங்கியில், அமெரிக்க டொலரின் கொள்முதல் பெறுமதி மாற்றமின்றி ரூ. 286.51 ரூபாவாகவும், விற்பனை பெறுமதி மாற்றமின்றி 296.25 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

சம்பத் வங்கியின் கூற்றுப்படி, அமெரிக்க டொலரின் கொள்முதல் மற்றும் விற்பனை பெறுமதி மாற்றமின்றி 287.50 ரூபா மற்றும் 296.50 ரூபா முறையே பதிவாகியுள்ளது. (ஐ)



# ஒரிரு நாட்களில் நாட்டை கட்டியெழுப்ப முடியாது

## தேசிய மக்கள் சக்தியின் எம்.பி சமந்த தெரிவிப்பு



கொழும்பு, நவ 15

ஒன்றிரண்டு நாட்களில் நாட்டை கட்டியெழுப்ப முடியாது என தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

தேசிய மக்கள் மக்கள் சக்தியின் புதிய நாடாளுமன்ற உறுப்பினர் சமந்த வித்தியாரட்ன இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

76 ஆண்டுகளாக அழிக்கப்பட்ட இந்த நாட்டை ஒரு வருடத்திலேனும் மீட்டெடுக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டை கட்டியெழுப்பும் நடவடிக்கை அரசாங்கத்தினால் மட்டும் செய்யக்கூடிய விடயமல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தேர்தல்வெற்றியின் பின்னர் மக்களுக்கு நன்றி பாராட்டும் நிகழ்வில் பங்கேற்ற போது அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

பாரியளவிலான மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

(ஐ)

Orient Finance
A Janashakthi Group Company
நிறுவனத்திலிருந்து நிலையான வைப்புகளிற்கு விசேட வட்டி விகிதம்.
தொடர்புகளிற்கு
0770235816 / 0774747278
No:550, Hospital Road,Jaffna

# ஐ.எம்.எப் பிரதிநிதிகள் குழு – மத்திய வங்கி அதிகாரிகள் இடையே சந்திப்பு




கொழும்பு, நவ 18

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு இன்று மத்திய வங்கி அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

குறித்த கலந்துரையாடலின் பின்னர், ஜனாதிபதி மற்றும் புதிய அரசாங்க அமைச்சர்களை சந்திப்பதற்கும் இந்த குழு திட்டமிட்டுள்ளது.

இந்த சந்திப்பின் முடிவில், அவர்கள் ஒரு செய்தியாளர் சந்திப்பை நடத்தி, விரிவாக்கப்பட்ட கடன் வசதியின் மூன்றாவது மதிப்பாய்வு தொடர்பான முன்னேற்றம் குறித்து தெரிவிக்கவுள்ளனர்.

விரிவாக்கப்பட்ட கடன்வசதி தொடர்பான மூன்றாவது மீளாய்வுக்காக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு நேற்று இலங்கைக்கு வந்தது.

இந்த விஜயத்தின் பின்னர், சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட கடன் வசதியின் நான்காவது தவணை இலங்கைக்கு வழங்கப்பட உள்ளது. சர்வதேச நாணய நிதியம் நான்கு வருட கால நீட்டிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் இலங்கைக்கு 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்க திட்டமிட்டுள்ளது.

இதன்படி, அதன் முதல் தவணையாக கடந்த ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதி 333 மில்லியன் அமெரிக்க டொலர்களும், டிசம்பர் 13ஆம் திகதி 337 மில்லியன் அமெரிக்க டொலர்களும் இலங்கைக்கு விடுவிக்கப்பட்டது.

மூன்றாவது தவணையாக இந்த ஆண்டு ஜூன் 12 ஆம் தேதி சர்வதேச நாணய நிதியத்தால் 336 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்தது. (ஐ)



# அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற வெடிப்பு சம்பவத்தில் இளைஞன் பலி



கொழும்பு, நவ. 18

அம்பாந்தோட்டை அங்குனுகொலபெலஸ்ஸ பகுதியில் இடம்பெற்ற வெடிப்பு சம்பவத்தில் 18 வயதுடைய இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அங்குனுகொலபெலஸ்ஸ பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அண்மையில் உள்ள கார்களுக்கு வர்ணம் பூசும் வாகன திருத்துமிடத்தில் இருந்த இரும்பு பெரல் திடீரென வெடித்ததில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

குறித்த சம்பவத்தில் அங்குனுகொலபெலஸ்ஸ - ரன்ன வீதியில் வசிக்கும் சதீப சித்மின என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

வெடித்துச் சிதறிய இரும்பு பெரல் வாகன திருத்துமிடத்தில் வாகனங்களுக்குப் நிறப்பூச்சு தின்னர் கொண்டு வரப் பயன்படுத்தப்படும் வெற்று இரும்பு பெரல் எனவும், அதில் இருந்த வாயுவே வெடிப்பதற்கான காரணமாக இருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், வெடித்த பெரலின் மூடி பகுதி கழன்று வீசப்பட்டு இளைஞரின் கழுத்துப் பகுதியில் பலத்த வெட்டுக் காயங்கள் ஏற்பட்டதால் இளைஞர் அகுனகொலபெலஸ்ஸ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். (ஐ)

# போதைப்பொருட்களுடன் கைப்பற்றப்பட்ட இழுவைப்படகு – கடற்படையினர் சுற்றிவளைப்பு



கொழும்பு, நவ. 18

போதைப்பொருட்களை கடத்தி வந்ததாக சந்தேகிக்கப்படும் மற்றுமொரு உள்ளூர் பல நாள் இழுவை படகு ஒன்றை இலங்கை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இந்த படகு, நேற்று இலங்கை கடற்படையினரால் இலங்கைக்கு மேற்கே 110 கடல் மைல் தொலைவில் உள்ள கடலில் வைத்து 5 பேருடன் கைப்பறறப்பட்டுள்ளது.

அந்த இழுவை படகில் சுமார் 40 கிலோ போதைப்பொருட்கள் இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

இதனையடுத்து சந்தேகநபர்கள் மற்றும் போதைப் பொருட்களுடன் கைப்பற்றப்பட்ட இழுவை படகு கடற்படையினரால் மேலதிக விசாரணைக்காகவும் சட்ட நடவடிக்கைகளுக்காகவும் கரைக்கு கொண்டு செல்லப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இரண்டு நாட்களுக்கு முன்னரும் 60 கிலோ நிறைக்கொண்ட போதைப்பொருட்களுடன் இழுவைப்படகு ஒன்றை கடற்படையினர் கைப்பற்றியிருந்தனர். (ஐ)



# நாடாளுமன்றத்துக்கு 27 தமிழர்கள் தெரிவு

கொழும்பு, நவ. 18

பத்தாவது நாடாளுமன்றத்துக்கு அரசியல் கட்சிகளில் இருந்தும் சுயேட்சைக் குழுவில் இருந்தும் மக்கள் ஆணை மூலம் 25 தமிழர்கள் தெரிவாகியுள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு கிடைக்கப்பெற்ற தேசியப் பட்டியல் ஆசனம் ஊடாக வைத்தியர் ப. சத்திய லிங்கத்தைச் சபைக்கு அனுப்புவதற்கு அக்கட்சியின் அரசியல் குழு தீர்மானித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் வேட்பாளராக இடம்பிடித்த இராமலிங்கம் சந்திரசேகரும் நாடாளுமன்றம் வருகின்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியும் தமிழர் ஒருவருக்குத் தேசியப் பட்டியலில் இடமளித்தால் அமையவுள்ள நாடாளுமன்றத்தில் 28 தமிழ் எம்.பிக்கள் அங்கம் வகிப்பார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தி இடமளிக்காவிட்டால் தமிழ் எம்.பிக்களின் எண்ணிக்கை 27 ஆக அமையும். 2020 பொதுத்தேர்தலில் மக்கள் ஆணை மூலம் 25 தமிழ் எம்.பிக்கள் தெரிவாகி இருந்தனர்.

தேசியப் பட்டியல் ஊடாக மூவருக்கு இடமளிக்கப்பட்டிருந்தது. அந்தவகையில் கடந்த நாடாளுமன்றத்திலும் 28 தமிழ் எம்.பிக்கள் அங்கம் வகித்தனர்.

10 ஆவது நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ள தமிழ் எம்.பிக்கள் விபரம்:

இலங்கைத் தமிழரசுக் கட்சி - 08
01. சிவஞானம் சிறிதரன் (யாழ்ப்பாணம்) - 32,833
02. இரா. சாணக்கியன் (மட்டக்களப்பு) - 65,458
03. ஞானமுத்து ஸ்ரீநேசன் (மட்டக்களப்பு) - 22,773
04. இளையதம்பி சிறிநாத் (மட்டக்களப்பு) - 21,202
05. சண்முகம் குகதாசன் (திருகோணமலை) 18,470
06. துரைராசா ரவிகரன் (வன்னி) - 11,215
07. கவீந்திரன் கோடீஸ்வரன் - 11,962
08. ப. சத்தியலிங்கம் (தேசியப் பட்டியல்)

நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானை சின்னத்தின் கீழ் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் வேட்பாளர்கள் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டனர்.

ஜீவன் தொண்டமான் 46 ஆயிரத்து 438 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். (கடந்த பொதுத் தேர்தலில் இ.தொ.காவுக்கு இரண்டு ஆசனங்கள் கிடைக்கப் பெற்றன)

தமிழ் முற்போக்குக் கூட்டணி

பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்ட தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு நுவரெலியாவில் மாத்திரமே இரண்டு ஆசனங்கள் கிடைக்கப் பெற்றன.

01. பழனி திகாம்பரம் (நுவரெலியா) - 48,018
02. வீ. இராதாகிருஷ்ணன் (நுவரெலியா) - 42,273 (கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு நுவரெலியா, கண்டி, பதுளை, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் மொத்தமாக ஆறு ஆசனங்கள் கிடைக்கப் பெற்றிருந்தன)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
01. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் (யாழ்ப்பாணம்) - 15,135

சுயேச்சைக் குழு 17
01. இராமநாதன் அர்ச்சுனா (யாழ்ப்பாணம்) - 20,487
01. செல்வம் அடைக்கலநாதன் வன்னி - 5,695

தேசிய மக்கள் சக்தி
01. கிட்ணன் செல்வராஜா (பதுளை) - 60,041
02. அம்பிகா சாமுவேல் (பதுளை) - 58, 201
03. கே. பிரபு (மட்டக்களப்பு) - 14,856
04. கே.இளங்குமாரன் (யாழ்ப்பாணம்) - 32,102
05. எஸ்.ஸ்ரீ பவானந்தராஜா (யாழ்ப்பாணம்) - 20,430
06. ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் (யாழ்ப்பாணம்) - 17,579
07. சரோஜா போல்ராஜ் (மாத்தறை) - 148,379
08. கிருஷ்ணன் கலைச்செல்வி (நுவரெலியா) - 33,346
09. எஸ். பிரதீப் - 112,711 (இரத்தினபுரி)
10. அருன் ஹேமச்சந்திர ( திருகோணமலை) - 38,368
11. செல்வதம்பி திலகநாதன் (வன்னி) - 10,652
12. மயில்வாகனம் ஜெகதீஸ்வரன் - 9,280 (வன்னி)
13. இராமலிங்கம் சந்திரசேகர் (தேசியப் பட்டியல்) (ஐ)







# மனோவுக்கு தேசியப் பட்டியல் வழங்குமா சஜித் அணி



கொழும்பு, நவ. 18

நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வி அடைந்தவர்களுக்குத் தேசியப் பட்டியல் ஊடாக வாய்ப்பளிப்பது தொடர்பில் இன்னும் தீர்மானம் எடுக்கப்படாததோடு, மனோ கணேசன் உட்பட பலரும் வாய்ப்பு கோரியுள்ளனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தேசியப் பட்டியல் விவகாரம் தொடர்பில் விரைவில் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாச கட்சியின் தலைவராக செயற்படுவதுடன், எதிர்க்கட்சித் தலைவர் பதவி ஹர்ஷ டி சில்வாவுக்கு வழங்கப்பட வேண்டும் என அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன. (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.11.2024 இல் வெளியிடப்பெற்றது.